**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.**

**MCOP. No.161/2021**

2025–ம் ஆண்டு ஜுலை திங்கள் 17–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **எ.ம.சா.4 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்வாணன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை**:

விபத்து நடந்த இடம் எசனை காட்டு மாரியம்மன் கோவிலில் இருந்து மேலப்புலியூர் செல்லும் சாலை என்றால் சரிதான். விபத்தில் இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதிகொண்டது என்றால்சரிதான். சம்பவஇடத்தில் TVS 50 வானத்தை ஓட்டி வந்தவர் இறந்துவிட்டார் என்றால் இரண்டு வாகனங்களும் பெரிய வண்டி ஆகும். இறந்தவர் வண்டிக்கு எதிர்திசையில் வந்த வண்டியில் ரவி, சரவணன், பழனிசாமி ஆகியோகள் வந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் ரவி மீது தான் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். இன்று சாட்சியம் அளிக்க எனக்கு ரவி தகவல் சொன்னார். என்னை போலிசார் விசாரிக்கவில்லை. விபத்து சம்மந்தமாக நான் வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்துக்கு ரவியின் கவனக்குறைவு தான் காரணம் என்றும், அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.